PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT - 1 2014

TAMIL LANGUAGE - PAPER 2

PRIMARY 6

BOOKLET : A & B

Name: ______________________( )    Date : __________

Class: Pr 6 ________

Parent's Signature: ______________

Marks:

---


Total Time for Booklet is 1 hr 40 mins

Do not open the booklet until you are told to do so.
Follow all instructions carefully.

ஆசிரியர் கூறுவதற்கு முன் கேள்வித்தாளைத் திறக்காதே! எல்லாக் கேள்விகளையும் கவனமாகப் படித்துப் பின் விடை அளிக்கவும்.

பெயர்: ____________________ தேதி: ____________________

வகுப்பு: 6 / (   )




வகுப்புத் தேர்வு

குறைந்த மதிப்பெண்

ஆறுதல் கூறினார்கள்

காரணத்தைச் சொன்னான்

உடல் நலமில்லை

தந்தையைக் கவனித்துக் கொள்ளுதல்

ஆசிரியரிடம் கூறினார்கள்

வீட்டிற்குச் சென்றனர்

உற்சாகம் அளித்தனர்

கவலை தீர்ந்தது

பெயர்: ______________

Pri

1. வேற்றுமை உருபு

பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12)

காட்டில் முயல் ஒன்று வாழ்ந்து வந்தது. ஒருநாள் அதற்கு ஒரு சிவப்பு மூக்குக்கண்ணாடி கிடைத்தது. அதை அணிந்துகொண்டு பார்த்தபோது எல்லாம் சிவப்பாகத் தெரிந்தது. "இது ஒரு மாயக்கண்ணாடி! இதை அணிந்துகொண்டு ______(1)______ உள்ள எல்லா மிருகங்களையும் பயமுறுத்தலாம்," என்று எண்ணியது. அப்போது அங்கே வந்த நரி, கண்ணாடி அணிந்த ______(2)______ பார்த்து ஏதோ பயங்கர மிருகம் என்று நினைத்துப் பயந்து நடுங்கத் தொடங்கியது. அதைக் கண்ட முயல், "நரியாரே! ஏன் இப்படி நடுங்குகிறீர்கள்? நான்தான் உங்கள் ______(3)________ முயல்," என்று கூறியது. அதைக் கேட்ட ______(4)______ பயம் நீங்கியது. ஆனால், முயல் தன் குறும்புத்தனமான விளையாட்டுகளை நிறுத்தவில்லை. அது மிகவும்______(5)______ காணப்பட்டது. இதேபோல் ஒருநாள், ______(6)______ தன் குறும்புத்தனத்தைக் காட்டியது. சினங்கொண்ட சிங்கம் முயலை அடித்துக் கொன்றது.

1.
1. காட்டின்
2. காட்டை
3. காட்டிலிருந்து
4. காட்டில்

2.
1. முயலை
2. முயலுக்கு
3. முயல்
4. முயலுடன்

3.
1. நண்பன்
2. நண்பனை
3. நண்பனால்
4. நண்பனது

4.
1. நரியில்
2. நரியுடன்
3. நரியின்
4. நரியால்

; Pri

5. 1. களிப்பால்
   2. களிப்பிலிருந்து
   3. களிப்பின்
   4. களிப்புடன்

6. 1. சிங்கத்தோடு
   2. சிங்கத்தின்
   3. சிங்கத்திடம்
   4. சிங்கத்தை

Pri

2. செய்யுள் \ பழமொழி

கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு ஏற்ற பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12)

7. ________________ எழுத்தும் கண்ணெனத் தகும்.

1. பொன்னும்
2. கண்ணும்
3. எண்ணும்
4. மண்ணும்

8. வைகறை ________________ எழு.

1. தூங்கி
2. துயில்
3. பொழுதில்
4. விடிந்து

9. இளமையில் சோம்பல் ______________ வறுமை.

1. சிலையில்
2. முதுமையில்
3. சிறுமையில்
4. பெருமையில்

10. எரிகிற விளக்கானாலும் ______________ வேண்டும்.

1. ஊன்றுகோல்
2. செங்கோல்
3. தூண்டுகோல்
4. நெருப்பு

Pri

11. சுடினும் செம்பொன் ______________ கெடாது.

1. தன்னொளி
2. சுடரொளி
3. விருந்து
4. மருந்து

(1)

12. கற்க கசடற ______________ கற்றபின் நிற்க அதற்குத் தக.

1. செய்பவை
2. கற்பவை
3. காண்பவை
4. கேட்பவை

(2)

Pri

3.தெரிவுவிடைக் கருத்தறிதல்

ஓர் ஊரில் பரமார்த்த குரு என்பவர் தன் சீடர்களுடன் வாழ்ந்து வந்தார். சீடர்கள் குருவுக்குத் தேவையான உதவிகளைச் செய்துகொண்டு தங்கள் அன்றாட பொழுதைக் கழித்தனர். ஊரில உள்ள மக்கள் கொடுக்கும் உணவை அனைவரும் பகிர்ந்து உண்டு தங்கள் பிழைப்பை நடத்தினர். அவர்கள்தான் முட்டாள்கள் என்றால் அவர்களைவிட முட்டாளாக இருந்தார் குரு. இந்த ஒற்றுமைதான் அவர்களை இணைத்தது என்றுகூடச் சொல்லாம்.

ஒருநாள், குரு தன் சீடர்களில் ஒருவனை அழைத்து உப்பு வாங்கி வரச் சொன்னார். அருகில் கடை ஏதும் இல்லாததால் ஆற்றைக் கடந்து சென்று உப்பு வாங்கி வருவதற்கு அவன் தன் துணிப்பையை எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

குரு அவனை நோக்கி, "சுத்தமான உப்பு வாங்கி வா. அழுக்கான உப்பாக இருந்தால் உன்னைச் சும்மா விட மாட்டேன்!'' என்று எச்சரித்து அனுப்பினார்.
சீடனும் ஆற்றைக் கடந்து கடையைச் சென்றடைந்தான். அவன் கடைக்காரனிடம் காசைக் கொடுத்து உப்பை வாங்கிக் கொண்டான்.
"கடைக்காரரே! உப்பு சுத்தமானதுதானா? சுத்தமான உப்பாகப் பார்த்து வாங்கி வரச் சொன்னார் என் குரு,'' என்றான்.

"உப்பிலே சுத்தமானது அசுத்தமானது என்று உண்டோ? உப்பு உப்புதான், எடுத்துக் கொண்டு போ!" என்றான் கடைக்காரன். "குரு தெரியாமலா சொல்லியிருப்பார்? உப்பிலே சுத்தமானது இருக்கத்தான் வேண்டும். இது சுத்தமான உப்புதானா என்று தெரிய வேண்டும்,'' என்று அவன் வற்புறுத்திக் கேட்டான். "என்னய்யா மடையனாக இருக்கிறாய்? இது சுத்தமான உப்புத்தான்!'' என்று கடைக்காரன் எரிச்சலோடு சொன்னான்.

ஆனால், சீடனின் ஐயம் தீரவில்லை. அவன் ஆற்றைக் கடந்து செல்லும்போது திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அசுத்தமான உப்பாக இருந்தால் குரு கோபித்துக் கொள்வார். அதனால், ஆற்றிலேயே உப்பை நன்றாகக் கழுவிச் சுத்தப்படுத்தி எடுத்துச் செல்லலாம்,'' என்று முடிவு செய்தான். அவன் ஆற்று நீரில் உப்பை நன்றாகக் கழுவினான். உப்பு முழுவதும் கரைந்து பை காலியாகிவிட்டது. தன் திறமையைக் கண்டு குரு மகிழ்ச்சியடைவார் என்று எண்ணியவாறே அவன் வீட்டை நோக்கிச் சென்றான்.

சீடனைக் கண்ட குரு, "உப்பு வாங்கினாயா?'' என்று கேட்டார். "ஆம்! வாங்கினேன். சுத்தமாக இருக்க வேண்டும் என்பதற்காக ஆற்றில் நன்றாகக் கழுவிவிட்டு வருகிறேன்!" என்று பதிலளித்தான் சீடன். "அது சரி, நல்ல வேலைதான் செய்தாய்; சரி போ," என்றார். ஆனால் அவர், "உப்பு எங்கே? பை காலியாக இருக்கிறதே!" என்று யோசிக்கத் தொடங்கினார்.

Pri

13. சீடர்கள் எப்படித் தங்கள் பொழுதைக் கழித்தனர்?

1. குருவுடன் பிச்சையெடுத்துக் கொடுத்து
2. குருவுடன் விளையாடி மகிழ்ந்து
3. குருவுக்குச் சேவை செய்து
4. குருவை ஏமாற்றி

14. குருவுக்கும் சீடர்களுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

1. அவர்கள் மிகவும் புத்திசாலிகள்
2. அவர்கள் முட்டாள்கள்
3. அவர்கள் மிகுந்த தைரியசாலிகள்
4. அவர்கள் கோழைகள்

15. சீடன் எதற்காக ஆற்றைக் கடந்து பக்கத்து ஊருக்குச் சென்றான்?

1. உப்பு விற்க வேண்டும் என்பதால்
2. பிச்சையெடுக்க வேண்டும் என்பதால்
3. உப்பு வாங்க வேண்டும் என்பதால்
4. வேலை தேட வேண்டும் என்பதால்

16. கடைக்காரர் சினமடைய காரணம் என்ன?

1. கடையில் உப்பு இல்லாததால்
2. கடையில் அசுத்தமான உப்பு இருந்ததால்
3. கடையில் சுத்தமான உப்பு இல்லாததால்
4. கடையில் உள்ள உப்பில் எந்தவித வேறுபாடும் இல்லை என்பதால்

17. சீடன் உப்பு வாங்கி வந்த பை ஏன் காலியாக இருந்தது?

1. உப்பு சுத்தமானதால்
2. உப்பு ஆற்று நீரில் கரைந்து போனதால்
3. உப்பு முடிந்துபோனதால்
4. கடைக்காரன் உப்பு தர மறுத்ததால்

Pri

<u>சொற்பொருள்</u>

<u>அடியிற்காணும் சொற்கலுக்கான சரியான பொருளுக்குரிய எண்ணை OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.(6)</u>

18. கழித்தனர்
1. போக்கினர்
2. வீணாக்கினர்
3. பயன்படுத்தினர்
4. அனுபவித்தனர்

(1)

19. கிளம்பினான்
1. பறந்தான்
2. புறப்பட்டான்
3. வந்தான்
4. போனான்

(2)

20. ஐயம்
1. அச்சம்
2. நாணம்
3. சந்தேகம்
4. பயம்

(3)

Pri

வசந்தம் சென்ட்ரலின்
ஏற்பாட்டில்

# தாயே உனக்காக!

அன்னையர் தினக் கொண்டாட்டம்
கவிதைப்போட்டி
மாபெரும் இறுதிச்சுற்று
இடம் : வசந்தம் சென்ட்ரல் அரங்கம்
நாள் : ஞாயிற்றுக்கிழமை மே 10
(அன்னையர் தினத்தன்று)
நேரம் : மாலை 7 மணி





அம்மா
என்றால்
அன்பு

ஆதரவாளர்கள்

வசுமதி மளிகைக்கடை
'ரோஜா' புஷ்பக்கடை

ஒவ்வொரு பிரிவிலிருந்தும்
சிறந்த 10 கவிதைகள்
ஒரு தொகுப்பு நூலாக
வெளியிடப்படும்.

போட்டிக்கான 3 பிரிவுகள்

முதல் பிரிவு- தொடக்கநிலை மாணவர்கள்
இரண்டாம் பிரிவு- உயர்நிலை மாணவர்கள்
மூன்றாம் பிரிவு- 18 வயதுக்கும் மேற்பட்டவர்கள்

தேர்வுச்சுற்று விவரம்
இடம்- உமறுப்புலவர் தமிழ்மொழி மன்றம்
நாள்- சனிக்கிழமை ஏப்ரல் 28
நேரம்- பிற்பகல் 2 மணிமுதல் மாலை 5 மணிவரை

பரிசுகள்
முதல் பரிசு : $300 புத்தகப் பற்றுச்சீட்டு
இரண்டாம் பரிசு : $200 புத்தகப் பற்றுச்சீட்டு
மூன்றாம் பரிசு : $100 புத்தகப் பற்றுச்சீட்டு

Pri

21. கவிதைப் போட்டி எதை முன்னிட்டு நடத்தப்படுகிறது?

1. தந்தையர் தினத்தை முன்னிட்டு
2. அன்னையர் தினத்தை முன்னிட்டு
3. சிறுவர் தினத்தை முன்னிட்டு
4. குடும்ப தினத்தை முன்னிட்டு

22. கவிதைப் போட்டிக்கு ஆதரவு வழங்குபவர்கள் யாவர்?

1. வசுமதி மளிகைக்கடை மற்றும் ரோஜா புஷ்பக்கடை
2. உமறுப்புலவர் தமிழ்மொழி மன்றம் மற்றும் வசுமதி மளிகைக்கடை
3. வசுமதி மளிகைக்கடை மற்றும் வசந்தம் சென்ட்ரல்
4. வசந்தம் சென்ட்ரல் மற்றும் உமறுப்புலவர் தமிழ்மொழி மன்றம்

23. போட்டியின் இறுதிச்சுற்று எங்கு நடைபெறுகிறது?

1. வசந்தம் சென்ட்ரல் அரங்கில்
2. உமறுப்புலவர் தமிழ்மொழி மன்றத்தில்
3. தொடக்கப்பள்ளியில்
4. உயர்நிலைப்பள்ளியில்

Pri

‘ஆ’ பிரிவு

C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

Q 24. வீட்டைச் சுத்தம் செய்யும் வேளையில் அம்மாவின் காலில் __________ ஒன்று குத்தியது. அதனால், அவர் வலி தாங்க முடியாமல் கத்தினார். Q 24. ( )

Q 25. அம்மா அன்று பிரியாணி சமைத்து வைத்தார். உணவுக்கு இன்னும் ருசி சேர்க்க கோழியை எண்ணெயில் __________ எடுத்தார். Q 25. ( )

Q 26. மருத்துவர்கள் பால் அருந்துவதன் முக்கியதுவத்தை எடுத்துரைத்தனர். அதில் அவர்கள், ஒரு குழந்தையின் __________ வளர்ச்சிக்குப் பால் அருந்துவது மிக முக்கிய அம்சமாக விளங்குகிறது என்று குறிப்பிட்டனர். Q 26. ( )

Q 27. என் அப்பா __________ புரியும் இடத்தில் ஒருவருக்கு H1N1 சளிக்காய்ச்சல் வந்தது. அவர் அப்பாவுடன் ஒரே இடத்தில் வேலை செய்ததால், அப்பா தனிமை படுத்தப்பட்டார். Q 27. ( )

Q 28. அரசாங்க அலுவலகத்தில் தீ மூண்டதால், நிறைய அரசாங்கத் தகவல்கள் நெருப்பில் __________ சாம்பலாயின. கணினி நிபுணர்கள் கணினியில் சேகரிக்கப்பட்ட தகவல்களை மீட்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளனர். Q 28. ( )

| | |
|---|---|
| பொரித்து | ஆனி |
| ஆணி | பனி |
| எரிந்து | மூளை |
| மூலை | பொறித்து |
| பணி | எறிந்து |

Pri

D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது. ( 14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| கடந்த 3 ஆண்டுகளில், 30 வயதான பீட்டர் கோஸ்டலோ என்பவர் ஜப்பானிலிருந்து தமது தாய் நாடான பிரிட்டன் வரை சைக்கிளில் பயணம் செய்தார். அவர் ஜப்பான் நாட்டிலுள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக (Q29)_________ செய்து வந்தார். | Q29 (       ) |
| தன் பணியை 2005-ஆம் ஆண்டில் முடித்துவிட்டு, தனது சைக்கிள் பயணத்தை (Q30)_________ . | Q30 (       ) |
| தன் பயணத்தில் அவர் (Q31)_________ பகுதிகளையும் பாலைவனப் பகுதிகளையும் கடந்து வந்ததாகக் கூறினார். | Q31 (       ) |
| இரவு வந்ததும், அம்மலைகளில் கூடாரம் கட்டியும் (Q32)______ வீடுகளிலும் தங்கியிருந்தார். முகம் தெரியாதவர்களாக இருந்தாலும் அவர் அவர்களின் வீட்டில் பிரச்சினையின்றி வாழ்ந்தார். | Q32 (       ) |
| அவர்கள் தன்னை வீட்டிற்கு அன்புடனும் மகிழ்ச்சியுட (Q33)________ என்று குறிப்பிட்டார், பீட்டர். | Q33 (       ) |
| தன் பயணத்தைத் தொடர்ந்து அவர் அண்மையில் சிங்கப்பூருக்கு வந்தார். அவர் இங்குள்ள நிர்வாகவியல் பல்கலைகழகத்தில் (SMU) உரையாற்றினார். அவர் தம் உரையில், பயணத்தின்போது, தான் உடல் நலம் (Q34)_________ சில பிரச்சினைகளை எதிர் நோக்கியதாகக் கூறினார். | Q34 (       ) |
| ஆனால், தன் குறிக்கோளை அடைய அவர் அவற்றை (Q35)_________ தன் பயணத்தைத் தொடர்ந்தார். விடாமுயற்சியும் தன்னம்பிக்கையுமே இப்பயணத்திற்கு மிக முக்கியமானவை என்று கூறித் தன் உரையை முடித்தார், பீட்டர். | Q35 (       ) |

| | | |
|---|---|---|
| வரவேற்றனர் | அந்நியரின் | சேவை |
| துவங்கினார் | பொருட்படுத்தாமல் | நடத்தினார் |
| போன்ற | உறவினர்களின் | பாதுகாத்தனர் |
| வேலை | சார்ந்த | மலை |

Pri

<u>D8 சுயவிடைக் கருத்தறிதல்</u>
<u>பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.</u>

ஒரு கிராமத்தில் இரண்டு பெண்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகவும் எப்போதும் சுறுசுறுப்பாகவும் இருந்ததால், அவர்களுடைய தாயாருக்குப் பெருமையாக இருந்தது.

சகோதரிகள் வீட்டைச் சுற்றி அழகான தோட்டம் ஒன்றை அமைத்து, அதை நன்கு பராமரித்து ,வந்தனர். இறக்கும்போது, தந்தை ஒப்படைத்த ஆட்டு மந்தையைக் கண்ணும் கருததுமாகக் கவனித்து வந்தனர்.

ஒருநாள், சகோதரிகள் வழக்கம்போல காட்டிற்குப் பழம் பறிக்கப் புறப்பட்டனர். அவர்களுடைய தாயார், "நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். காட்டில் தொலைவாகச் செல்ல வேண்டாம். கொடிய மந்திரவாதிக் குள்ளன் ஒருவன் இருக்கிறான். மற்றவர்களுக்குத் துன்பம் தருவதே அவனுடைய வேலை. அவனிடமிருந்து ஒதுங்கி இருங்கள்!" என்று எச்சரித்தார். அம்மா கூறியதை எண்ணிக் கொண்டே அவர்கள் காட்டுக்குள் நுழைந்தனர்.

அப்போது, அவர்கள் ஒரு கரடியைக் கண்டனர். குளிர் காலமாக இருந்ததால் பனி பெய்துகொண்டிருந்தது. கரடி, "குளிர் என்னை வாட்டுகிறது. எனக்கு உதவி செய்கிறீர்களா?" என்று கேட்டது. உடனே சகோதரிகள் கரடியை அழைத்துச் சென்றார்கள். "கரடியே! நீ அடுப்பின் அருகே சென்று அமர்ந்துகொள். குளிருக்கு இதமாக இருக்கும்," என்று கூறினார்கள். கரடியும் அவ்வாறே செய்தது. நாள்கள் உருண்டோடின. கோடைக் காலமும் வந்தது. கரடி சகோதரிகளிடமிருந்து விடைபெற்றுச் சென்றது.

சகோதரிகள் காட்டிற்கு மீண்டும் சென்றனர். அப்போது, குள்ளன் அங்கே புதையலிலிருந்து கிடைத்த பொற்காசுகளை எண்ணிக்கொண்டிருந்தான். இவர்களைப் பார்த்து, "என்னிடம் உள்ள செல்வத்தைத் திருட வந்தீர்களா? என் மந்திரத்தை உங்கள் மீது செலுத்துகிறேன். நீங்கள் கழுதையாக மாற விரும்புகிறீர்களா? நரியாக மாற விரும்புகிறீர்களா?" என்று கூறியபடி தன் மந்திரகோலால் அவர்களை மாற்ற எழுந்தான். அப்போது, கரடி திடீரென்று தோன்றிக் குள்ளனைத் தாக்கிக் கொன்றது. என்ன ஆச்சரியம்! கரடியின் உருவம் ஓர் இளவரசனாக மாறியது. அவன், "நான் பக்கத்து நாட்டு இளவரசன். குள்ளன் மந்திரத்தால் என்னைக் கரடியாக மாற்றியிருந்தான். இவனைக் கொல்ல எனக்கு இப்போதுதான் வாய்ப்பு கிடைத்தது," என்றான்.

36 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது . ( 20 ம.பெ)

36. தாயார் பெருமையடையக் காரணம் என்ன? ( 3 )

37. சகோதரிகள் பொறுப்பு மிக்கவர்கள் என்பதை எதன் மூலம் நாம் அறியலாம்? ( 4 )

38. காட்டில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தாயார் அறிவுரை கூறினார்? ( 4 )

39. கரடி ஏன் நடுங்கியது? ( 2 )

40. கரடி தன்னைக் குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்ள என்ன செய்தது ? ( 3 )

41. கரடி எப்போது சகோதரிகளைக் காப்பாற்றியது ? ( 4 )

# P6 SA1
# TESTPAPER 6

காட்டில் முயல் ஒன்று...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 4 | 2) 1 | 3) 1 | 4) 3 | 5) 4 | 6) 3 |
| 7) 3 | 8) 2 | 9) 2 | 10) 3 | 11) 1 | 12) 2 |
| 13) 3 | 14) 2 | 15) 3 | 16) 4 | 17) 2 | 18) 1 |
| 19) 2 | 20) 3 | 21) 2 | 22) 1 | 23) 1 | 24) 3 |
| 25) 1 | 26) 6 | 27) 9 | 28) 5 | 29) 10 | 30) 4 |
| 31) 12 | 32) 2 | 33) 1 | 34) 11 | 35) 5 | |

36) சகோதரிகள் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்ததே தாயார் பெருமையடையக் காரணமாகும்.

37) சகோதரிகள் வீட்டைச்சுற்றி அழகான தோட்டம் ஒன்றை அமைத்து அதை நன்கு கவனித்து வந்தனர். இறக்கும்போது அவர்களுடைய தந்தை ஒப்படைத்த ஆட்டு மந்தையைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தனர். இதன் மூலம் சகோதரிகள் பொறுப்பு மிக்கவர்கள் என்பதை நாம் அறியலாம்.

38) காட்டில் கவனமாக இருக்க வேண்டும் என்றும், தொலைவாகச் செல்லக் கூடாது என்றும், கொடிய மந்திரவாதிக் குள்ளனிடமிருந்து ஒதுங்கி இருக்க வேண்டும் என்று தாயார் அறிவுரை கூறினார்.

39) குளிர் காலமாக இருந்ததால் பனி பெய்து கொண்டிருந்தது. அதனால் கரடி நடுங்கியது.

40) கரடி தன்னைக் குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்ள அடுப்பின் அருகே சென்று அமர்ந்து கொண்டது.

41) குள்ளன் சகோதரிகளைத் தன் மந்திரக்கோலால் நரியாகவோ அல்லது கழுதையாகவோ மாற்ற எழுந்த போது அவர்களைக் காப்பாற்றியது.